# தமிழர் பண்பாடும் கற்றல் திறன் மேம்பாடும்.

**கா.ஆத்மநாதன் & முனைவர் கோ.ப. நல்லசிவம்**
**முனைவர் பட்ட ஆய்வாளர் & துறைத்தலைவர்**
**மெய்யியல் துறை, தமிழப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-613010.**
kathmanathan575@gmail.com & gpnsivam@gmail.com

9

**ஆய்வுச் சுருக்கம்**

கல்வி என்பது கற்றலும் கற்பித்தலுமே இது வாழ்நாள் முழுவதும் நடைபெறக்கூடிய செயலாகும்.மானுட வாழ்வின் அடித்தளமாக விளங்குவது பண்பாடு. பண்பாட்டுக் கூறுகளைக் கல்விதான் தனிமனிதனின் நல்லியல்புகளை வளர்க்கும்.கற்றல் என்பது மாணவர்களைச் சார்ந்தது கற்பித்தல் என்பது ஆசிரியர்களைச் சார்ந்தது இதில் கற்றல் திறன்கள் என்பது மாணவர்கள் அடைய வேண்டியதும் அதற்கான சூழ்நிலையை அமைத்துக் கொடுப்பதும் ஆசிரியரின் கடமையாகும். ஒரு வகுப்பில் குறிப்பிட்ட எண்ணிக்கை உடைய மாணவர்கள் இருக்கிறார்கள் என்றால் அவர்கள் அனைவரும் ஒரே மாதிரியான கற்றல் திறனை பெற்றவர்கள் அல்ல மாறுபட்ட மாணவர்கள் வேறுபட்ட சூழ்நிலைகள், வேறுபட்ட குணங்கள், மாறுபட்ட ஆளுமைப்பண்புகள் வெவ்வேறான கற்பனைகள் குறிக்கோள்கள், எண்ணங்கள், செயல்கள் என்று எல்லாம் வேறுபட்டுக் காணப்படுகின்றது. அதேபோலத்தான் மாறுபட்ட கற்றல் திறன்களும் மாணவர்களிடத்தில் காணப்படுகின்றன. மாணவர்கள் படிக்கும் பள்ளிக்கு வெளியிலும் கற்றல் திறன்கள் விரிந்து கிடக்கின்றன. பொதுவாக மாணவர்கள் இடத்தில் எழும் கேள்விகளும், சந்தேகங்களும் பிரச்சனைகளும், அவர்களுக்குச் சவாலாக அமைந்து விடுகின்றன. இத்தகைய சூழ்நிலையில் அதற்கான தீர்வுகளை வகுப்பறையிலே காண வேண்டியது மிக அவசியமாகும்.

மாணவர்கள் புரிந்து கொள்ளும் திறனில் குறைபாடு ஏற்படும்போது மாணவர்களுக்கும் ஆசிரியருக்கும் ஒரு இடைவெளி இருந்துக் கொண்டே இருக்கும். மேலும் புற காரணிகளால் கவனச்சிதைவு ஏற்பட்டு வகுப்பறையில் பெயரளவில் இருப்பார்களே தவிர அவர்களிடத்தில் கற்றல் தொடர்ந்து நிகழாது .இவ்வகையான மாணவர்கள் கல்வியில் மேம்பட்ட நிலையை அடைவது இல்லை . ஆகவே அனைத்து வகையான மாணவர்களும் நல்ல செம்மையான கல்வி அறிவைப் பெறுவதற்கான திறன்களை மாணவர்கள் மத்தியில் வளர்ப்பதன் மூலம் வேறுபாடற்ற பாகுபாடில்லாதக் கல்வியை உருவாக்க முடியும்.

**திறவுச்சொற்கள்**

தமிழர் பண்பாடு,கற்றல் திறன்கள், அடைவு, மேம்பாடு, உத்திகள், செம்மை.

**முன்னுரை**

இன்றைய நவீனக் கால கல்வி முறையில் எத்தனையோ நவீனத் தொழில்நுட்பங்கள் வந்திருந்தாலும் கூட மாணவர்களின் அடிப்படை கல்வித் திறன்களை மேம்படுத்துவதில் மிக கவனம்

செலுத்த வேண்டும். அடிப்படை கல்வி திறன்களாக கேட்டல், பேசுதல், எழுதுதல், மற்றும் படித்தல் ஆகிய நான்கு அடிப்படைத் திறன்களை மாணவர்களிடத்தில் எவ்வாறு மேம்படுத்துவது, ஒழுக்கங்களைப் பின்பற்றி பண்பாடு கலாச்சாரத்துடன் அறம் சார்ந்த வாழ்க்கையைக் கடைப்பிடித்து வாழ்வது என்பது பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**கல்வியே பண்பாடு**

வாழ்க்கையைப் பண்பட்டதாக அமைத்துக் கொண்டு வாழ்வதற்குக் கல்வி துணை புரிகின்றது. நாட்டில் உள்ள ஒவ்வொருவரும் கல்வியினை ஐயமறக் கற்றுப் பண்பாட்டுடன் வாழ்ந்தால்தான் குடும்பம் முன்னேற்றம் அடையும் குடும்ப முன்னேற்றம் அடைந்தால்தான் நாடும் முன்னேற்றம் அடையும். அற நூல்களைக் கற்று பண்பாடு கலாச்சாரங்களைப் பின்பற்றி வாழும் வாழ்க்கையே சிறப்பான வாழ்க்கையாகும். இதனையே வள்ளுவர்

**பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல்**
**மண்புக்கு மாய்வது மன்.[1] குறள்_996**

பண்பு என்பதற்குக் கலித்தொகை

**பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல் [2]**

என விளக்குகிறது.

**திறன்**

திறன் என்பது ஒரு குறிப்பிட்ட வகை செயற்பாட்டில் ஒருவர் அந்த செயலை நுட்பமாகவும், வெற்றிகரமாகவும் ஈடுபடுவதை சாத்தியமாக்கும் ஆளுமைப்பண்புகள் ஆகும்.

**கற்றல் திறன்**

பொதுவாக கற்றலுக்குத் தேவைப்படும் திறன்கள் அனைத்துமே கற்றல் திறன் என்று அழைக்கப்படுகின்றன.திறன்கள் கல்வி, பயிற்சி மற்றும் அனுபவம் வாயிலாக விருத்தி செய்யப்படுகின்றன. கற்றலுக்கான அடிப்படைத் திறன்களாக நான்கு வகை திறன்களை முதன்மையாக இங்கு குறிப்பிடலாம்.அவை, கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகியவனாகும்..இதில் கேட்டலையும்,படித்தலையும் உணரும் திறன்களாகவும், பேசுதலையும், எழுதுதலையும ்உணர்த்தும் திறன்களாகவும். கருதலாம்.

**கேட்கும் திறன்**

**செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வம்**
**செல்வத்து ளெல்லாந் தலை [3]. குறள்-411**

ஒருவர் சேர்த்துள்ள செல்வங்களிலேயே தலையான செல்வமாகக் கருதப்படுவது, அவர் தன் செவி வழியாகச் சேர்த்துள்ள அறிவாகிய செல்வமாகும். என்பது வள்ளுவரின் கூற்று.

கற்றல் செயல்பாட்டில் ஆசிரியர் மாணவர்களுக்குப் பாடம் தொடர்பான கருத்துக்களை விளக்கிக் கூறும்போதும், சமூக நலன் சார்ந்த ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகள் வழங்கும்போதும், கருத்துக்களைச் செவி மடுத்துச் செம்மையுடன் கேட்டுத் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு கூர்ந்து கேட்கும் தகவல்கள், கருத்துக்கள் மாணவர்களின் நினைவகத்தில் நன்கு பதியப்படுகிறது.

இவ்வாறு நினைவகத்தில் பதியப்படுகின்ற தகவல்கள் கற்றலில் ஈடுபடும் மாணவர்களுக்கு பெரிதும் பயனுள்ளதாக அமைகின்றன. எந்த நேரத்திலும் பதியப்பட்ட தகவல்களை ஒரு முறைக்குப் பலமுறை நினைத்துப் பார்க்கின்றனர். இதனால் மாணவர்களின் கற்றல் திறன் மேம்பட்ட நிலையை அடையும்.

**பேச்சுத் திறன்**

பொதுவாக மனிதர்கள் தங்கள் கருத்துக்களைப் பிறர் புரிந்து கொள்ளும் வகையிலும் உணரும் வகையிலும் பேச்சு வழி தெரிவிக்கிறான் இவ்வாறு பேசும்போது தெரிவிக்கும் கருத்துக்கள் பிறருக்குத் தெளிவாகவும் எளிதாகவும் உணர்ந்துக் கொள்ளும் வகையில் பேச்சு அமைந்தால் அது தெளிவான பேச்சு என்கிறோம். மாணவர்கள் தாங்கள் கேட்டதையோ அல்லது படித்ததையோ பிறருக்கு விரைவாகத் தெரிவிக்க வேண்டும் என்றால் அது பேச்சு வழியே வெளிப்படுத்த முடியும். நல்ல பேச்சு திறன் உள்ள மாணவர்கள் தாங்கள் கூறும் கருத்துக்களையும் , செய்திகளையும் பதட்டம் இல்லாமலும் , தடுமாற்றம் இல்லாமலும் குறித்த நேரத்தில் செய்திகளை வழங்கிவிடமுடியும். மேலும் இவ்வகை திறனுள்ள மாணவர்கள் பேச்சுப்போட்டி மற்றும் கருத்தரங்குகளில் தங்களின் திறமைகளைச் சிறப்பாக வெளிப்படுத்துகின்றனர். நல்ல பேச்சுத் திறன் உள்ள மாணவர்கள் தாழ்வு மனப்பான்மை இன்றி இந்தச் சமூகத்தில் தாங்களும் கல்வியில் மேம்பட்ட நிலையை அடைய முடியும் என்ற தன்நம்பிக்கையை ஊட்டக்கூடியது இந்த பேச்சு திறன். இவ்வகை திறன்களை ஆக்கத்திறன் என்றும் நாம் குறிப்பிடுகிறோம்.

**படிக்கும் திறன்**

சிந்தனைத் திறன்களுக்கு மூலாதாரம் படிக்கும் திறனாகும். மாணவனுக்குக் கொடுக்கப்பட்ட தகவலோடு சுயமாகவும் சுதந்திரமாகவும் ஒரு தொடர்பை உருவாக்கிக் கொள்ள இது உதவுகிறது. மாணவர்கள் பாடப்புத்தகங்களையும், பொதுவான நூல்களையும் பிழையின்றி தடுமாற்றம் இல்லாமலும் தயக்கமில்லாமலும் சரளமாகப் படிப்பதையே நன்கு படிக்கும் திறன் என்கிறோம். மாணவர்கள் பாடப்புத்தகங்களை படிக்கும் போது அதில் கூறப்படும் தகவல்களில் உள்ள கருத்துக்களை அதன் பொருள் மாறாமல் புரிந்து கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு புரிந்து கொள்ளும் திறனையே மேம்பட்ட திறன் என்று குறிப்பிடுகிறோம். அன்றாடம் மாணவர்கள் பாட புத்தகங்களை திரும்பத் திரும்ப படித்துப் பயிற்சி மேற்கொள்ளும் போது, ஞாபக திறன் அதிகரித்து மாணவர்கள் கற்றலில் நல்ல நிலையை அடைய முடியும். மாணவர்கள் படிக்கும்போது பின்வரும் நோக்கங்களோடு படிக்க வேண்டும்.

*படிக்கும் வரிகளில் குறிப்பிட்டுள்ள நோக்கம் என்ன?

*சிந்திக்க வைப்பதா? அல்லது தகவல் தகவல் அளிப்பதா?

*உண்மைக் கூறுகளா ?அல்லது கருத்துக்களா?

*படிக்கும்போது பொருள் உணர்ந்து படித்தல் வேண்டும். [4]

இவ்வாறாகப் படிக்கும் செயற்பாட்டில் மாணவர்கள் தங்களை ஏற்படுத்திக் கொள்ளும் போது கற்றலில் நல்ல அடைவு நிலையை அடைய முடியும்..

**எழுதும் திறன்**

மாணவரின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பது அவன் தற்கும் கல்வியே. கற்கும் கல்வியில் நல்ல அடைவைப் பெறுகிறானா என்று மதிப்பீடு செய்வதற்கு அவன் எழுதிய தேர்வில் பெற்ற மதிப்பெண்ணையே முதன்மை மதிப்பீடாக எடுத்துக் கொள்ளும் நிலை நம் கல்வி முறை உள்ளது. இன்றைய கல்விமுறையானது தேர்வில் நல்ல மதிப்பெண் பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு அமைந்துள்ளது. மாணவர்கள் பாட நூல்களிலிருந்து பெற்ற அறிவையும் கருத்துக்களையும் சிந்தனைகளையும் எழுத்து வடிவமாக்கி தேர்வில் அதிக மதிப்பெண் பெறுவதற்கு எழுத்து திறன் மிக அவசியமானதாக இருக்கிறது. மாணவர்கள் தேர்வு எழுதும் போது சரியான வாக்கிய அமைப்பு சொற்களுக்கு சொற்கள் இடைவெளி சரியான மற்றும் தெளிவான கையெழுத்து அமைப்புடன் இருத்தல் அவசியமாகும். இவ்வாறு இருக்கும் பட்சத்தில் அந்த மாணவன் தேர்வில் அதிக மதிப்பெண்ணை பெறக்கூடும். பள்ளியில் படிக்கும் அனைத்து மாணவர்களின் கையெழுத்தும் தெளிவாகவும் நேர்த்தியாகவும் இருப்பது கிடையாது. இதனால் குறைந்த மதிப்பெண் பெறுவதற்கான வாய்ப்பு நேரிட்டு விடுகிறது இவ்வகை மாணவர்கள் தங்களின் கையெழுத்து திறனை மேம்படுத்திக் கொண்டு தேர்வில் நல்ல மதிப்பெண்ணைப் பெறுவதற்குத் தினமும் கையெழுத்து பயிற்சியை மேற்கொண்டால் நல்ல திறனைப் பெற முடியும்.

**தொகுப்புரை**

இன்றைய தலைமுறை கல்வியில் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் மாணவர்களின் கற்றல் திறனை பண்பாட்டுப் பின்னணியோடு மேம்படுத்தும் நோக்கில் நல்ல கல்விமுறையும், ஒழுக்கம் சார்ந்தக் கல்வியோடு நவீன யுக்திகளையும பயன்படுத்தி மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்த வேண்டும்.மேலும் சமூக நலன் சார்ந்த கல்வியையும் மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டும்.

**மேற்கோள்கள்**

1. திருக்குறள் பக்-89

2.மேலது குறள்-411

3.மேலது குறள்-996

4.வல்லுநர்க்குழு, படைப்பாற்றல் கல்வி முறை (ALM) பக்-17

5. https://www.indeed.com

**துணைநூற் பட்டியல்**

1.முனைவர்,மும்தாஜ்பேகம, இன்றைய கல்வியின் புதுமைப் போக்குகள்,சாந்தா பப்ளிஷர்ஸ், சென்னை-600014. முதற்பதிப்பு-2006.

2.சு. வஜ்ரவேலு, பன்முகத் தன்மை கொண்ட வகுப்பறைகளில் கற்பித்தல், வேதா எண்டர்பிரைசஸ், தி.நகர், சென்னை, முதற்பதிப்பு-2019.

3.முனைவர் எ.மு. ராஜன், ஸ்ரீ .ஸ்ரீராம், ஆரம்பக் கல்வி ஓர் அலசல்(ஆய்வரங்க கட்டுரைகள்), அகிலாண்டேஸ்வரி வெளியீடு விழுப்புரம்-605602, முதற்பதிப்பு-2012.

4. முனைவர் கரு. இராமச்சந்திரன்,அற நூல்களில் கல்வியியற் கோட்பாடு

கருத்தான் பதிப்பகம், சென்னை-600001, முதற் பதிப்பு-2006.

5. முனைவர் பி. பார்த்தசாரதி, கற்பித்தல் கற்றல் முதன்மைகள், சாந்தா பப்ளிஷர்ஸ், சென்னை-600014, முதற்பதிப்பு-2016

6. https://www.indeed.com